இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை—4.

Wrapper Printed at Commercial Printing &
Publishing House, Madras—1.

# எங்கள் கவி பாரதி

22.


ம. பொ. சிவஞானம்

(தமிழரசுக் கழகத் தலைவர்)

மாணிக்கம் படிப்பகம்,
வ. உ. சி. தெரு,
[illegible]
கீழக்[illegible]
சின்னாளபட்டி அஞ்சல்.
மதுரை [illegible] வட்டம்.

இன்ப நிலையம்

மயிலாப்பூர்—சென்னை-4.


33
ங்கள் கவி
பாரதி
ம.பொ.சிவஞானம்
ன்ப நிலையம்
செல்வம்

## ம. பொ. சி. எழுதிய நூல்கள்

—: :—

வீரபாண்டியக் கட்டபொம்மன்
கயத்தாற்றில் கட்டபொம்மன்
கப்பலோட்டிய தமிழன்
வானொலியில் ம. பொ. சி.
தமிழன் குரல்
சிலப்பதிகாரமும் தமிழரும்
தமிழர் கண்ட காந்தி
சுதந்தரப் போரில் தமிழகம்
பிரிவினை வரலாறு
தமிழரசா, திராவிடஸ்தானா?
வள்ளுவர் வகுத்த வழி
தமிழர் திருநாள்
கண்ணகி வழிபாடு
மேதினப் புரட்சி
பேச்சுக் கலை
தளபதி சிதம்பரனார்
தலைவர் ம. பொ.சி. (தொகுப்பு நூல்)
நல்ல நாடு (அச்சில்)
இலக்கியச் செல்வம் ,,
ம. பொ. சி. பேசுகிறார் ,,
ம. பொ. சி. மணிமொழிகள் ,,

# எங்கள் கவி பாரதி!

தமிழால் ஏடெழுதிப் பொருள் சேர்ப்பார் சிலர்; புகழ் சேர்ப்பார் வேறு சிலர். பாரதியாரோ, தமிழைப் பொருள் சேர்க்கும் கருவியாகவோ புகழ் வளர்க்கும் சாதனமாகவோ பயன்படுத்தினாரில்லை. தமிழின் வாழ்வுக்காகத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

“தமிழை வளர்க்கும் தாதாக்கள் நாங்கள்தான்; நாங்கள் தோன்றிய பிறகுதான் தமிழ் வாழ்வடைந்தது, வளம் பெற்றது” என்பர் தற்பெருமையாளர்கள். இந்த அறியாமைக்கும் ஆணவத்திற்கும் அப்பாற்பட்டவர் பாரதியார். அவர், வள்ளுவரை வாழ்த்தினார்; இளங்கோவைப் போற்றினார்; கம்பரைப் புகழ்ந்தார்.

யாமறிந்த புலவரிலே கம்பரைப்போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை உண்மை
வெறும் புகழ்ச்சி யில்லை

என்று பாரதியார் பாடிய வரிகள் வார்த்தைக்கு வார்த்தை வாய்மை மணப்பனவாகும்.

சிலருக்கு, தமிழ் வழங்கும் திருநாட்டை ‘திராவிட நாடு’ என்று சொன்னால்தான் நாக்கு இனிக்

முதற் பதிப்பு : 2—10—53

உரிமை ஆசிரியருக்கே

விலை
அணா எட்டு

கண்ணகி அச்சகம், திருவல்லிக்கேணி, சென்னை-5.

# பதிப்புரை

மகாகவி பாரதியார், கடந்த காலம்—நிகழ் காலம்—எதிர்காலம் ஆகிய முக்காலங்களைப் பற்றியும் தம் அறிவுக் கூர்மையால் தெரிந்து பல அருமையான கவிதைகளை இயற்றியுள்ளார்.

பாரதியாரின் கவிதைகளில் மண்டிக் கிடக்கும் புகழைத் தமது பேச்சுத் திறமையாலும் எழுத்து வன்மையாலும் தலைவர் ம.பொ.சி. பிரசாரம் செய்து வருகிறார். இந்நூல் அவர் அவ்வப்போது வெளியிட்ட கருத்துக்களின் தொகுப்பாகும். பாரதியார் தமிழரசுக்கு ஆதரவாகவும்—வழிகாட்டியாகவும் பல கவிதைகளை அப்போதே இயற்றியுள்ளார். அவைகளையும்—அவர் கவிதைகளிலுள்ள வேறு பலசிறப்புக்களையும் இந்நூலில் ம. பொ. சி. வெளிப் படுத்தியுள்ளார்.

இந்நூலை வெளியிடும் நல்வாய்ப்பை அளித்த தலைவர் ம. பொ. சி. அவர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கம் உரியதாகும்.

சென்னை.
23—9—53

சோம. சுவாமிநாதன்
இன்ப நிலையம்

# தீர்க்கதரிசி

காந்தியடிகள் வாழ்ந்த நாளில் அவருடைய உயர்ந்த குணங்களை ஒப்புக் கொள்ளாதவர்கள் கூட, அடிகளார் மறைந்த மறுகணமே, "உத்தமர் காந்தி"—"உலகப் பெரியார் காந்தி" என்றெல்லாம் பட்டங்கள் தந்து பாராட்டுகள் கூறினர். ஆம், சமாதி அருகே நின்று சரமகவி பாடினர்! வாழும் காலத்தில் இழித்துப் பேசுவதும், இறந்த பின்னர் ஏற்றிப் போற்றுவதும் 'அவர்கள்' பண்பாடு!

பாரதியாரோ, காந்தியடிகள் சாதாரண மனிதராகக் கருதப்பட்ட காலத்திலேயே அவருக்கு மகாத்மா என்ற பட்டம் தந்து பாராட்டினார். "மகாத்மா, நீ வாழ்க! வாழ்க!!" என வாழ்த்தினார். பிற்காலத்தில் நாம் கண்ணாரக் கண்டு, கையார அஞ்சலி செய்த மகாத்மாவை, 1920-க்கு முன்பே தமது தீர்க்கதரிசனத்தால் தெரிந்து கொண்டார் பாரதியார்.

காந்தியடிகளின் சாத்வீக முறையால் இந்திய நாடு விடுதலை பெறாதென்று பாரதியார் காலத்தில் ஒரு சாரார் வாதாடினர். அமெரிக்கா நடத்திய விடுதலைப் போரைப் போல, பிரெஞ்சு மக்கள் நடத்திய குடியரசுப் புரட்சியைப் போல, இந்தியாவும் ஆயுதப் புரட்சி செய்தால்தான் ஆங்கில ஆட்சி அகலும் என்பது அவர்களுடைய அரசியல் நெறி.



பாரதியார், அகிம்சையை மதமாகக் கொண்டவர் என்று நம்புவதற்கில்லை. என்றாலும், காந்தியடிகளின் தலைமையில் அவருக்குப் பரிபூரண நம்பிக்கை இருந்தது. அதனால், அவர் தமது இறுதிக் காலத்தில் காந்திய முறைகளையும் நம்பினார்.

காந்தி சொல் கேட்டார் காண்பார்
விடுதலை கணத்தினுள்ளே

என்ற இரண்டே வரிகளில் காந்தியத்தின் வெற்றியில் தமக்கிருந்த நம்பிக்கையை அழுத்தந் திருத்தமாக அறிவித்திருக்கிறார். பாரதியாரின் முடிவு தீர்க்கதரிசனம் வாய்ந்தது என்பதை பாரத நாடு பார்த்துவிட்டதல்லவா!

வானொலிக் கருவியைப் பற்றி இந்தியா அறிந்து கொள்வதற்கு முன்பே,

காசி நகர்ப் புலவர் பேசு முரைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவி செய்வோம்

என்று தமது ஆசையை வெளியிட்டார்.

எவரெஸ்ட் சிகரத்தை அடைய வேண்டுமென்ற முயற்சி 1921-ல் தான் ஆரம்பமானது. 1953-ல் டென்சிங் என்பவர் எவரெஸ்ட் பனிமலையின் உச்சியை அடைந்து, அதற்காக உலக நாடுகளின் பாராட்டுதலைப் பெற்றார். இந்த அற்புதத்தை இந்தியர்கள் நிகழ்த்தவேண்டுமென்ற ஆசை-நிகழ்த்துவார்கள் என்ற நம்பிக்கை 1920-க்கு முன்பே பாரதியாருக்கு இருந்தது. அவர்,

வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்

என்ற வரியில், தமது நம்பிக்கையை நாட்டு மக்களுக்கு அறிவித்தார்.

கிறது! பாரதியாருக்கோ, தமிழ் நாடு என்ற சொல், இனிக்கும் தேனைச் செவி வழியே சென்று இதயத்துக்கு இன்பம் தந்தது.

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே

என்ற வரிகள் வெறும் ஆர்வத்தால் பாடியது மட்டுமல்ல; அனுபவத்தால் கூறியதுமாகும்.

பாரதியார், சாதி வேற்றுமைகளைக் கடந்தவர். தமிழரில் ஒரு பகுதியினரை 'ஐயர்' என உயர்த்தியும், மற்றொரு பகுதியினரைப் 'பறையர்' எனத் தாழ்த்தியும் அழைக்கப்படும்நிலைகண்டு அவர் ஆத்திரங் கொண்டார். மற்றும், பாரதநாட்டை அடிமைப் படுத்திய பரங்கியனை, மக்கள் 'துரை' என்று கூறித் துதி பாடுவதைப் பார்த்து நெஞ்சம் பதைத்தார்.

பார்ப்பானை ஐயரென்ற
காலமும் போச்சே—வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற
காலமும் போச்சே

என்ற பாடலில், அவருடைய வேதனை வெறியாக மாறியிருப்பதைப் பார்க்கலாம்.

ஆனல், சாதி வேற்றுமைகளை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு அந்த வேற்றுமைகளை எழுத்தாலும் பேச்சாலும் வற்புறுத்தி வளர்த்து வரும் சிலர், "பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே" என்ற ஒரு சொற்றொடரை மட்டும் சொல்லிச் சொல்லிச்

# பாரதி போற்றிய பாஞ்சாலி

பாரதியார், இளங்கோவைப் போன்று தனிக் காவியம் எதுவும் எழுதவில்லை. ஆயினும், பாரதத்தில் பாண்டவரும் கௌரவரும் சூதாடும் பகுதியையும் துரியோதனன் சபையில் துரெளபதை மானபங்கம் செய்யப்படும் பகுதியையும் சேர்த்து தமது கண்ணோட்டப்படி பாஞ்சாலி சபதம் என்ற காவியமொன்றைச் செய்து வைத்தார். பார்தக் கதையில் பாஞ்சாலியைத் துகிலுரியும் கட்டத்தைச் 'சூது போர்ச் சருக்கம்' என்றார் வில்லிபுத்தூரார். 'திரெளபதி மான சம்ரட்சணம்' என்றனர் பாகவதர்கள். 'சூது-துகிலுரிதல்' என்றனர் நாடகக்காரர். 'பாஞ்சாலி சபதம்' என்றார் பாரதியார். ஒரே நிகழ்ச்சிக்கு இத்தனை பெயர்கள் தோன்றக் காரணம் என்ன? பாரதக் கதையில் அந்தப் பகுதியை ஒவ்வொருவரும் வெவ்வேறு கண்ணோட்டத்துடன் காண்பதேயாகும்.

பாண்டவர்களுக்கும் துரியோதனாதியர்களுக்கும் பின்னே நிகழப் போகும் பெரும் போருக்குக் கால்கோள் விழா நடத்தியது இந்தச் சூதாட்டப் போரே. ஆகவே, வில்லிப்புத்தூரார் 'சூது போர்ச் சருக்கம்' என்றார். கண்ணன் அருளால் திரெளபதியின் வண்ணத்துகில் வளர்ந்து கொண்டேபோவது வைணவ பக்தர்களின் மனத்தைப் பரவசமாக்குகிறது. ஆகவே, அவர்கள் 'திரெளபதி' மானசம்ரட்சணம்' என்கின்றனர். நாடகக்காரர் நாடகத்தைக் காண வருவோரின் கண்ணையும் கருத்தையும் கவரச் செய்வதில் கவனமுடையவர்கள். எனவே, சூதாட்டத்தில் சகுனி காய் உருட்டும் காட்சியும், தருமன் மண்ணையும் மனைவியையும் பணயம் வைத்துத் தோற்பதுடன், தம்பியரையும் தன்னையும் சூதில் தோற்கும் பரிதாபக் காட்சியும், அரச சபையிலே அண்ணன் மனைவியைத் துச்சாதனன் துகிலுரியும்அலங்கோலக் காட்சியுமே நாடகக்காரருக்கு முக்கியமாகப் படுகின்றன. எனவே, அவர்கள் 'சூது-துகிலுரிதல்' என்கின்றனர்.

ஆனால், பாரதநாட்டின் விடுதலைப் போரில் பற்று கொண்ட பாரதிக்கு பாஞ்சாலியின் மானத்தைக் காத்த பரந்தாமனைப் பற்றிய கற்பனைச் சித்திரம் கருத்தைக் கவரவில்லை. மனைவியை வைத்துச் சூதாடும் தருமனின் செய்கை அவர் மனதுக்கு வேதனையளிக்கிறது. ஆனால், அரச சபையில்-ஆன்றோரின் முன்னிலையில் அஞ்சாது நின்று, "எனது நாட்டைஅபகரித்து என் நாயகரை அடிமை கொண்டு, அன்னைக்குச் சமமான என்னையும் அவையிலேநிறுத்தி,அவமானம் விளைவித்ததுரியோதனன் துச்சாதனன் ஆகியோரின் இரத்தத்தை எண்ணெயாகத் தடவி என் கூந்தலை வாரி முடிப்பேன்; அதுவரை முடியேன்" என்று திரெளபதி புகன்ற சபதமொழிகளே பாரதியாரின்உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்தன. அடிமைப் பட்ட தமிழ் மக்களுக்குப் பாஞ்சாலியின் சபதம் ஆண்மையூட்டும் என்று நம்பினார். ஆகவே, பாரதத்தின் இதர எல்லாப் பகுதிகளையும் தள்ளி, சூதுபோர்ச் சருக்கத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, அதிலும் நல்லவற்றைக் கைக்கொண்டு அல்லவற்றைத் தள்ளி வழிநூல் செய்தார்.

சுவை காண்கின்றனர். இதுவும் வகுப்புவாதமே
பன்றி, அதற்கு எதிர்வாத மன்று. அதே பாட்
டில் வரும் "வெள்ளைப் பரங்கியைத் துரையென்ற
காலமும் போச்சே" என்ற சொற்றொடரைச்
சொல்ல மாட்டார்கள். பிறர் சொன்னாலும்
கேட்க மாட்டார்கள். ஆம்; அவர்களுக்கு, பரங்
கியர் சொந்த நாட்டார். பாரதியார் உள்ளிட்ட
பார்ப்பனர் எல்லாம் அன்னிய நாட்டார் போலும்!

பாரதித் திருநாள் இன்று தமிழ் நாட்டின்
தேசியத் திருநாளாகி விட்டது. "பார்ப்பனன் திரு
நாளைக் கொண்டாடாதே!" என்று ஏட்டில் எழுதி
நாட்டிற்கு அறிவித்த "அறிஞ"ரெல்லாம், இன்று
"மக்கள் கவி பாரதி" என்று பாராட்டுகின்றனர்.
பாரதியார் அந்தணர் என்பதற்காக, அவரை ஆரிய
ராக-தமிழருக்கு அந்நியராக எண்ணுகின்ற வட்டா
ரத்திலேயே 'பாரதிதாசர்'களைத் தோற்றுவிக்கு
மளவிற்கு பாரதீயம் வெற்றி பெற்றிருக்கிறது.

'பாரதம்' என்பது, இந்தியாவின் பண்டைப்
பெயர்களுள் ஒன்று. அதில் 'பார்ப்பனீயம்' ஒட்டிக்
கொண்டிருக்கிறது என்பர் வகுப்பு வாதிகள்.
பாரதியாரோ, அதில் அறிவு மணப்பதாகக் கூறு
கின்றார்.

**ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்**
**நல்ல பாரத நாட்டிடை வந்தீர்**

என்ற வரிகளில் ஞானம் அதாவது அறிவு என்ற
சொல்லுக்கு 'பாரதம்' என்று பொருள் கூறுகின்
றார்.

ஒன்றும் பயன்படத் தக்கவையல்ல என்பார்க்குப் பதில் போன்றதாகும்.

பாரதிக்கு முன் தோன்றிய புலவரெல்லாம் பழமையைப் பாராட்டினர். ஆனால், அந்தப்பழமையில் படிந்துள்ள பழுதைக் கண்டாரில்லை. பாரதியாரும் பழமையைப் பாராட்டினார். என்றாலும், அதிலுள்ள பழுதைப் பழித்துத் துணிவாகப் பாடினார். அவர் இயற்றிய 'பாஞ்சாலி சபதம்' இதற்கு எடுத்துக்காட்டு. தருமர், பாஞ்சாலியை வைத்துச் சூதாடிய கொடுமையைச் சகியாது,

இது பொறுப்பதில்லை தம்பி!
எரிதழல் கொண்டு வா
கதிரை வைத்திழந்தான் அண்ணன்
கையை எரித்திடுவோம்

என்று வீமன் வெகுண்டு கூறுவதை எடுத்துக் கூறுகிறார். இலக்கியத் துறையிலே கண்மூடித்தனமான பக்தியைக் கடைப்பிடிப்பவரல்லர் பாரதியார். அறிவுக்குப் பொருந்தும் வழியில் பழைய காவியங்களுக்குப் புது மெருகு தரும் திறமையை பாஞ்சாலி சபதத்தில் பல இடங்களில் காணலாம்.

# பாரதியின் வாழ்த்து

பாரதியாரை நினைக்கும்போது அவரது மீசை கண்முன் தோன்றுகிறது. அது, தமிழன் வீரத்தின் அறிகுறி. என்பர். பாரதியின் பாடலைப் பாடக் கேட்டால், மீசை இல்லாதவனுக்கும் வீரம் பொங்கக் காண்கிறோம். இன்னும் சொன்னால், படித்தறியாத ஏழைக்கிழவனும் பாரதியாரின் பாட்டைக் கேட்பானாகில்,

துடித்தெழுந்து தன்மெலிந்த தோளைக் கொட்டித்
தோளிருந்த கந்தலுடை சுருக்கிக் கட்டி
எடுத்தெறிய வேணுமிந்த அடிமை வாழ்வை
இப்பொழுதே இக்கணமே என்றென்றுரைத்து
அடித்துரைத்து ஆவேசம் கொள்வான்

என்று நாமக்கல் கவிஞர் கூறுகிறாரென்றால், பாரதியாரின்பாட்டில் ததும்பும் வீரத்தைக் கூறவும் வேண்டுமா?

பாரதியார் தம் வாழ்நாள் முழுவதும் தாய் நாட்டின் விடுதலைக்காகவே பாடுபட்டார். உலக நாடுகளின்வரிசையில் தம் தாய்த்திருநாடு சீரழிந்து கிடப்பதை எண்ணி, "மற்றை நாட்டவர்முன் நின்றிடும் போழ்து மண்டுமென் வெட்கத்தின் ஆணை" என்றும், "சுதந்திரத் துவஜம் துளங்கிலா நாட்டிடைப் பிறந்தேன்" என்றும் கூறிக் கண்ணீர் வடித்தார்.

இன்று வடக்கெல்லைத் தமிழர்கள், "வேங்கடத்தை விடமாட்டோம்" என்று கோஷிக்கின்றனர். தெற்கெல்லைத் தமிழர்கள், "குமரி முனையைக் கொள்ளை கொடோம்' என்று குரல் கொடுக்கின்றனர். தமிழகத்தின் எல்லைகள் "வடவேங்கடம்—தென்குமரி" என்றார் பனம்பாரனார். அந்த இயற்கை அரண்களை ஆண்-பெண் தெய்வங்களாக்கி, "நெடியோன் குன்றமும், தொடியோள் பௌவமும் தமிழுக்கும் தமிழ் நிலத்துக்கும் வரம்புகள்''என்றார் இளங்கோவடிகள். குமரியும் வேங்கடமும் தமிழ் மொழிக்கு மட்டும் வரம்புகளல்ல; தமிழர் வளர்த்த புகழுக்கும் வரம்புகள் என்பதை,

நீலத் திரை கடல் ஓரத்திலே—நின்று
நித்தந் தவஞ்செய் குமரி எல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு

என்ற வரிகளில் வற்புறுத்துகின்றார். ஆம், தமிழருடைய புகழ் ஆதியில் இமயம் வரை பரவியிருந்தது; இடைக்காலத்தில் விந்தியம் வரை குறுகியது; பாரதியார் காலத்தில், வேங்கட மலைவரை தேங்கிக் கிடந்தது. குமரி முதல் இமயம் வரையுள்ள இந்தியப் பெரு நிலத்தில் பரவிக்கிடந்த புகழ், குமரிக்கும் வேங்கடத்துக்கும் இடைப்பட்ட சிறு நிலத்தில் அடங்குமா? அதனாற்றான், மாலவன் குன்றத்துக்கும், குமரிக் கோயிலுக்குமாக தமிழர் புகழ் மண்டி மோதுகின்றது என்கிறார் பாரதியார்.

பாரதியார், இந்திய மக்கள் எல்லோரையும் ஒரே சமுதாயத்தினராகக் கற்பனை செய்கின்றார். 'பாரத சமுதாயம் வாழ்கவே' என்றும் வாழ்த்துகின்றார். ஆனால், 'பாரத சமுதாயம்' என்பது,



மொழிவழி வெவ்வேறு தேசிய இனங்கள் ஒன்று கலக்கும் சங்கமம் என்பதை பாரதியார் மறக்கவில்லை. "தாயின் மணிக்கொடி பாரீர்" என்ற பாடலில், இந்திய சமுதாயத்தை இனவாரி பிரித்துக் காட்டுகின்றார். அந்த இனங்கள் மொழிவழிப்பட்டவையேயன்றி, மதவழிப்பட்டவை யன்று.

செந்தமிழ் நாட்டார், சேரத்து மக்கள், சிந்தை துணிந்த தெலுங்கர், கன்னடர், காலனும் அஞ்சும் மராட்டர், பஞ்சநதத்துப் பிறந்தோர் ஆகிய பல்வேறு இனத்தவரும் தனித்தனியாக அணிவகுத்து தாயின் மணிக்கொடியின் கீழ்நின்று "எங்கள் நல்லுயிர் ஈந்தும் இக்கொடியினைக் காப்போம்" என்று சபதம் செய்யும் "அந்த அற்புதக் காட்சியோர் ஆனந்தமன்றோ" என்று கூறி பாரதி அகங் களிக்கிறார். ஆம். இனவாரி சுதந்திரம்தான் இந்தியாவின் ஐக்கியத்தைக் காக்கும் என்ற உண்மையை இந்தப் பாடல் உணர்த்துகின்றது.

இன்று எழுந்துள்ள இன உணர்ச்சியைக் கற்பனைக் கண்ணாற் கண்டு பாடினாரே, அந்தப் பாரதியை நினைப்போமாக! அப்போது நம் இருதயத்தில் ஓர் இறுமாப்பு கிளர்ந்தெழும்; தமிழன் என்ற உண்மை உணர்ச்சி உள்ளத்தே பொங்கும்; தமிழ் மொழி மீது உண்மைப் பற்று உண்டாகும்; தன்னம்பிக்கை பிறக்கும்.

ஆம்; இடைக்காலப் புலவர்களைப் போன்று வானுலகைப் பாடாது, மக்களின் வாழ்வைப் பாடுவதே அவர் கண்ட புதுவழி.

“சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே’ என்கிறார் பாரதியார். ஆனால் நாமோ, முன்பு தண்ணீர் குடித்தோம்; அதில், தமிழினிமை தவழ்ந்தது. பின்னர், தீர்த்தம் சாப்பிட்டோம்; இன்று ‘வாட்டர்’ குடிக்கிறோம்; இனி, ‘பானி’ பருகுவோம் போலும்!

முன்னர் மனைவியை மணந்தோம்; பின்னர் பாரியாளைப் பாணிக்கிரகணம் பண்ணிக் கொண்டோம்: இன்று ஒய்வை(Wife) மேரேஜ் (Marriage) செய்துக் கொள்கிறோம்; சொல்லில் உயர்வான தமிழ்ச் சொல்லை மறந்து பிறமொழி வயப்படும் போதையரானோம். இனியேனும், எதைக்குடித்தாலும் அதில் தமிழினிமையைக் கலந்து குடிப்போம்; யாரை மணந்தாலும், தமிழ் மணத்தையே காதலித்து வாழ்வோம். கம்பரின் கவியை, வள்ளுவரின் வாய்மையை கண்ணகியின் வீரத்தை வளர்ப்போம்!

தமிழ் உரிமை இழந்தது; அதனால், தமிழரின் அறிவு(புலமை) அடிமையானது. அறிவு அடிமையாக, நாடு பாழானது. இனியேனும் அறிவு ஓங்க, அடிமை மடிய, மொழிப்பற்றும் இனப்பற்றும் கொண்டு பாரதியின் பாடல்களைப் படியுங்கள். அவரது அரிய நண்பர் வ. உ. சிதம்பரம்பிள்ளையின் வீரத்திற்குத் தலைவணங்குங்கள். அன்றே நம் உள்ளத்தில் உரிமைக் கனல் எழும்பி அடிமைத்தனம் சாம்பலாகும்.

நமது சிந்தையில் அறம் வேண்டும். செயலில் மறம் வேண்டும். இரண்டும் அற்றோர் மக்களல்ல;



மாக்களே. விலங்குக்கும் நல்ல உரிமையுணர்ச்சியுண்டு. அறமும் மறமுமற்ற மாந்தர்க்கு அதுவுமில்லையே! பாரதி, மறவுணர்ச்சியற்ற மக்களை, ‘வீரமிலா நாய்கள்’ என வெறுப்புடன் இடித்துப் பேசுகிறார். ஆம், பல்கலை பயின்ற அறிஞரெல்லாம் பதவி ஆசையில் மயங்கி மிடிமையைத் தாங்கும் தூணாக நின்றால், வீரம் எங்கிருக்கும்? அன்றி அறந்தான் சிறக்குமா? பாரதி, மக்களின் அறியாமையைக் கண்டு ஆத்திரங் கொண்டார்.

கஞ்சி குடிப்பதற் கிலார்—அதன்
காரணங்கள் இவையெனும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சமென்றே—நிதம்
பரதவித்தே உயிர் துடிதுடித்து
துஞ்சி மடிகின்றாரே—இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியிலையே!

என்று வேதனைப்பட்டார்; விம்மியழுதார். நெஞ்சு பொறுக்க முடியாத நிலைகெட்ட வாழ்வை நினைக்க நினைக்க அவருக்கு ஆத்திரம் வருகிறது. அந்த வெறுப்புக் கனலும் உள்ளத்தோடு ரஷ்யப் புரட்சியைப் பாடுகிறார். அது காளியின் கோபக்கூத்தாக அவர் அறிவில் ஆடுகின்றது. ரஷ்யாவில் “மாகாளி”யின் ஆட்டம் மாமன்னன் ஜாரை மாள வீழ்த்துகிறது. கொடுங்கோலன் ஜார் ‘ஆகா’ என அலறிச் சாகிறான். அவன் அரசும் அழிகின்றது. பாரதியின் ஆவேசம் அடிமையை வெறுக்கிறது. அவர் ஆர்வம் உரிமையை வரவேற்கிறது.

பாஞ்சாலி சபதத்தில், நாட்டை வைத்துச் சூதாடும் தருமனின் செய்கையை,

கோயிற் பூசை செய்வோர்—சிலையைக்
கொண்டு விற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன்—வீட்டை
வைத் திழத்தல் போலும்
ஆயிரங்க ளான—நீதி
அவை உணர்ந்த தருமன்
தேயம் வைத் திழந்தான்—சிச்சீ
சிறியர் செய்கை செய்தான்

என்று வன்மையாகக் கண்டிக்கிறார். தருமனின் இந்தச் செய்கையைப் பழம் புலவர்கள் எல்லோரும் அவனது பொறுமைக்குச் சான்றெனப் போற்றினர். ஆனால், பாரதியாரோ பொறுப்பற்ற செயலெனத் தூற்றுகிறார்.

ஆம், புலவரெலாம் போற்றிய தருமனைச் 'சீ' கொட்டிச் 'சிறியன்' எனத் தூற்றுகிறார் மறுமலர்ச்சிக் கவி பாரதி. பழைய இலக்கியங்களைப் புதிய கொள்கைக்குப் பிரசார சாதனமாகக் கொள்வதற்குப் பாரதியார் பாஞ்சாலி சபதத்திலேயே வழிகாட்டுகின்றார். இலக்கியத் துறையில் அரசியல் பிரசாரம் செய்வது அடாத செய்கையென அலறித் துடிப்போர் ஆழ்ந்து சிந்திக்க!

பாஞ்சாலி சபதத்தில் தருமனின் முறையற்ற செயலை சாக்காகக் கொண்டு முடியாட்சியை எதிர்த்துப் பிரசாரம் செய்கிறார் பாரதி. அன்று முதல்



இன்று வரை முடியாட்சியால் நேர்ந்து வரும் கொடுமைகளைச் சுட்டிக் காட்டுகின்றார்.

நாட்டு மாந்த ரெல்லாம்—தம்போல்
நரர்க ளென்று கருதார்
ஆட்டு மந்தை யாமென்(று)—உலகை
அரசரெண்ணி விட்டார்
காட்டும் உண்மை நூல்கள் பலதாங்
காட்டினார் களேனும்
நாட்டு ராஜநீதி—மனிதர்
நன்கு செய்யவில்லை

என்கிறார். இந்த இடத்தில் பாரதியார் கருத்திலிருப்பது தருமன் மட்டுமல்ல; பாஸிஸ, நாஸிஸ, ஏகாதிபத்தியக் கொடுங்கோலர்களெல்லாம் அவர் நினைவுக்கு வருகின்றனர்; நமக்கும் நினைப்பூட்டுகின்றார். தனிமனிதன் ஆட்சி என்பதும் தவறு இழைக்கும் தன்மை வாய்ந்ததே என்ற உண்மையை உணர்த்துகின்றார். அன்று தொட்டு இன்றுவரை சிம்மாசனங்களால் நாடு சீர்ப்பட்டதில்லை என்பதை 'நாட்டு ராஜநீதி மனிதர் நன்கு செய்யவில்லை' என்ற வரிகளில் வருணிக்கிறார். இந்த அநீதி அஸ்தினாபுரத்தில் மட்டுமல்ல, உலகத்தில் எங்கும் தான் என்பதை,

ஊரை யாளு முறைமை—உலகில்
ஓர் புறத்து மில்லை

என்ற வரிகளில் உணர்த்துகிறார். ஒரு பாரதக் கதையிலே, அதுவும் பாஞ்சாலி சபதத்திலே இன்றைய மறுமலர்ச்சிக் காலத்தில் நறு மணம் வீசும் கருத்துக்களான பெண்மையின் வீரம், முடியாட்சியின் கொடுமை ஆகியவைகளைப் புகுத்திப் பாடும் பாரதியாரின் புதுமுறை, பண்டை இலக்கியங்கள்

காதல்தானே இங்கு மலர வேண்டுவது? பாண்டிய நாட்டு இளைஞனைப் பிடித்து, சேரப் பெண்ணின் அண்டையில் உட்கார வைக்கிறார். ஓடப்பாட்டு வேண்டுமே! சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைக்கின்றனர், தென்னாட்டுக் காதலனும், காதலியும்! ஆம்; உண்மைக் காதல், மதத்தையும் மாகாணத்தையும் மறக்க வைக்கிறது.

இந்திய இனங்கள் ஒன்றோடொன்று கொண்டும் கொடுத்தும் வாழ பண்டமாற்று வாணிபத்தைக் கூறுகின்றார் பாரதி. கங்கை நதிப் புறத்துக் கோதுமைக்குக் காவிரி வெற்றிலையைப் பண்டமாற்றுகிறார். பட்டினப் பாலையின் பண்பை, பழந்தமிழர் வாழ்க்கையை இதில் பார்க்கிறோம். வடவர் “கோதுமையைத் தந்தால், தமிழர் வெற்றிலை தரலாமேயன்றி, பணந்தந்து தமிழ் நாட்டுப் பொருளாதாரத்தைப் பாழாக்கக் கூடாது” என்கிறார் பாரதி. மராத்திப் புலவன் தமிழனின் தனியாட்சி மன்றம் புகுகின்றான். தமிழர் வீரத்தைப் புகழ்ந்து பாடி பரிசு கேட்கிறான். தமிழன், தனது வீரத்தால் வீழ்த்திய யானையின் தந்தத்தைப் பரிசளிக்கிறான்.

சிங்க மராட்டியர்தங் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்

என்ற வரிகளில் இதைப் பார்க்கிறோம்.

பணக்காரனுக்குப் பாரதி வழங்கிய பட்டம் பிரபு அல்ல, திருடன்! வள்ளுவரும் கம்பரும் வகுத்த பொதுவுடைமை பண்பைப் பாரதியும் வரவேற்கிறார்.

இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்

என்றார் வள்ளுவர். இயற்கை அன்னை யாவர்க்கும் வேண்டிய யாவும் தருகிறாள். அதனை ஒரு சிலர் தங்கள் தனிவுடைமையாக்கிக் கொண்டு, மக்கட்குச் சோறில்லை, துணியில்லை என்ற நிலையைத் தோற்றுவித்திருக்கின்றனர். ‘இல்லை’ என்ற இந்நிலை கண்டு எல்லாந் தந்த அன்னை (நிலமென்னும் நல்லாள்) சீற்றத்தால் சிரிக்கின்றாள் என்கிறார் வள்ளுவர். இதைத்தான்,



வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்—இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்—பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்

என்று பாடினார் பாரதி. தமது கடைசிப் பாடலை திருவல்லிக்கேணி கடற்கரையில் நின்றுதான் பாடினார்; மக்கள் நிறைந்த கூட்டத்தில் அவரது மணிக்குரல். கேட்டது: அதுதான் பாரதியின் இறுதிக் குரல் அந்தக் குரல், “பாரத சமுதாயம் வாழ்கவே!” என வாழ்த்தியது.

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது வுடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக் கொரு புதுமை—வாழ்க!
பாரத சமுதாயம் வாழ்கவே!

இன்று சென்னைக் கடலில் வீசும் ஒவ்வொரு அலையொலியும் “பாரத சமுதாயம் வாழ்கவே!” என்று வாழ்த்தொலி செய்கிறது.

ஆகஸ்டு 15-ல் நாம் விடுதலை விழா கொண்டாடுகிறோம். அந்த விழாவிலே, வெற்றியின் வெறி இருக்கிறதே யொழிய, வருங்கால வாழ்வுக்கு விளக்

எண்ணற்ற தேசபக்தர்கள் சிறையில் வாடுவதை நினைத்த போதெல்லாம்,

மேலோர்கள் வெஞ்சிறையில்
விழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில்
நோவதுவுங் காண்கிலையா?

எனக் கடவுளிடம் முறையிட்டுக் கதறியழுதார்.

பாரதியை வருத்திய அந்தத் துன்ப நாட்கள் தொலைந்தது; அடிமை இருள் அகன்று வருகின்றது; மிடிமைச் சிறை அதோ தகர்ந்து கொண்டிருக்கிறது. அன்று சிறையில் வாடிய தேசபக்தர்கள் இன்று சிம்மாசனமேறி ஆட்சி புரிகின்றனர். எனவே, அழுது புலம்பிய அந்த பாரதியை மறந்து,

“ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே

என்று சுதந்திரத்தைக் கற்பனைக் கண்ணால் கண்டு உள்ளம் குளிர்ந்து பள்ளுப் பாடிய பாரதியாரின் திருநாளையே இன்று கொண்டாடுவதாக எண்ணுங்கள்.

கம்பர், “இறையறிந்து உயிர்க்கு நல்கும் இசை கெழு வேந்தன்” என்று அரசனைப் போற்றினார். பாரதியாரோ,

பொழுதெல்லா மெங்கள் செல்வங் கொள்ளை கொண்டு
போகவோ? நாங்கள்—சாகவோ
அழுது கொண்டிருப்போமோ ஆண்பிள்ளைகள்
அல்லமோ? உயிர்—வெல்லமோ?

என்று அரசாங்கத்தைத் தூற்றினார். மேலும், கம்பர் தாம் காட்டும் அரசியலில், “உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்” என்ற வரியில், மன்னனை உடலாகவும் மக்களை அவ்வுடலில் இயங்



கும் உயிராகவும் கொண்டு முடியாட்சியில் குடியாட்சியைப் புகுத்த முயலுகிறார்.

அடிமையைக் கடியவந்த பாரதியார் ‘‘நாமெல்லோரும் இந்நாட்டு மன்னர்’’ என்ற வரியில், மக்களுக்காக மக்களாட்சியே வேண்டும் என்று வற்புறுத்தி மன்னனுக்குக் கம்பர் தந்த சின்ன இடத்தையும் மறுத்து விடுகின்றார். கம்பருக்கும் பாரதிக்கும் உள்ள இந்தக் கருத்து வேறுபாட்டிற்குக் கால வேறுபாடே காரணமாகும்.

கம்பர் சுதந்திர நாட்டிலிருந்து பாடினார். அவருக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு பாரதி அடிமை நாட்டிலிருந்து பாடினார். கம்பருக்கும் பாரதிக்கும் இடைக்காலத்தில் தோன்றிய புலவர்கள் மக்களின் வாழ்க்கையோடு இயையாது வானுலகத்துக்கு வழிகாட்டும் புராணங்களும், பிரபந்தங்களும் இயற்றத் தொடங்கினர். இதன் பயனாக, தமிழ் இலக்கியம் மக்களின் தொடர்பிழந்து புலவர்களின் குடிசைகளிலும், துறவிகளின் மடங்களிலும் சிறைப்பட்டது. இந்தக் காலத்தில்தான் பாரதி தோன்றி தமிழுக்கு விடுதலை தந்தார்.

பாரதியார் தாம் பிறக்கும்போதே அடிமைத் தளைபூண்ட கோலத்தில் உள்ள தமிழன்னையைத் தரிசித்தார். நாட்டில் சுதந்திர ஒளியற்று எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. இதைக்கண்ட பாரதி,

தேவி! நின்னொளி பெறாத
தேயமோர் தேய மாமோ?
ஆவியங்குண்டோ? செம்மை
அறிவுண்டோ? ஆக்க முண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள் வேதங்க ளுண்டோ?

என்றுகூறி உள்ளங் குமுறினார். அந்த உள்ளத் துடிப்பிலிருந்து பாரதிக்கு ஒரு புதுவழி புலப்பட்டது

பெண்ணுக்குப் பெருமை தந்தவர் தமிழர். கல்வியைக் கலைமகளென்றும், செல்வத்தைத் திருமகளென்றும் கற்பனை செய்தனர் தமிழ்ப் புலவர்கள். ஆம்; ஆக்க வழிப்பட்ட கலைகளையெல்லாம் அம்மை வடிவில் வணங்கியதே ஆதித் தமிழர் பண்பாடு.

ஆனால், பிற்காலத்தில், தமிழகத்தில் குடியேறிய பிற இனத்தவரால், பெண்மையின் பெருமை குறைந்தது; உரிமை மறைந்தது. 'அடுப்பூதும் மங்கைக்குப் படிப்பெதற்கு?'' என்ற அப்பகுத்தறிவற்றவரின் வாய்மொழி தமிழகத்தின் பழமொழியாயிற்று. இந்தக் கொடுமை தொலைய தமிழ்ப் பண்பாட்டு வழி நின்று,

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக்
கொளுத்துவோம்

என்று புரட்சி செய்யுமாறு பெண்ணினத்திற்குச் செய்தியனுப்புகிறார் பாரதியார்.

வைய வாழ்வு தன்னிலெந்த வகையினும்
நமக்குள்ளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு
பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே

என்று, ஆணினத்துக்கு அன்போடு அழைப்பு விடுக்குமாறும் அறிவுரை கூறுகிறார்.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொண்டிடில்
அறிவி லோங்கியிவ் வையந்தழைக்குமாம்

என்று ஆண், பெண் வேற்றுமையற்ற சமத்துவ சமுதாயத்திற்கு வாழ்த்தும் கூறுகிறார்.



"பறையன் என்போன் கீழ்ச் சாதி; ஏனெனில், பண்டு செய்த பாவத்தின் பயனே பறைச் சென்மம். அவனைத் தொடவும் கூடாது.'' இது, சாதி வெறியர்களின் சாத்திர வாதம். மக்களின் நலனுக்கு எதிரான வாதம். பாரதியாரோ, 'பாவம்' என்ற சொல்லை மக்களை ஏய்ப்போருக்கு எதிராகப் பயன்படுத்துகிறார்.

சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்

சாதிக்கோர் நீதி கூறி ஏழை மக்களை இழித்துப் பேசி ஏய்த்துப் பிழைப்பதே பாவம்; அப்படிச் செய்வோரே பாவிகள். அத்தகைய,

பாதகம் செய்பவரைக் கண்டால்—நீ
பயம்கொள்ள லாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா

என்று சுதந்திர இந்தியாவின் பாப்பாவுக்குச் செய்தி அனுப்புகிறார் குழந்தைக் கவி பாரதியார். பாரதியாரின் "பாப்பாப் பாட்டு'' இறவா வரம் பெற்ற இலக்கியமாகும். ஔவைப் பாட்டி தந்த நீதி நூற்களில் வரும் நெறிகள் அனைத்தையும் பாப்பாப் பாட்டில் பதிய வைத்து விட்டார் பாரதி.

இந்தியா, ஏகாதிபத்தியக் கொடுமையினின்று மட்டும்தான் விடுதலை பெற்றது. ஆனால், உள்நாட்டுச் சுரண்டல் வாதிகளின்-சுயநலச் சூழ்ச்சிக்காரர்களின்-கொடுமைகளிலிருந்து இன்னும் விடுதலை பெறவில்லை. உழுது விதைத்து அறுப்பாருக்கு உணவில்லாக் கொடுமை ஒழியவில்லை; சமயமுளபடிக்கெல்லாம் பொய் கூறிப் பிழைக்கும் சதிகாரர் ஆதிக்கம் சாயவில்லை. இதை மறத்தல் கூடுமோ!

# மொழிவழி இனப் பிரிவினை

‘தாயின் மணிக்கொடி பாரீர்!’ என்ற பாடலில், இந்திய சமுதாயத்தை இன வாரிப் பிரிக்கின்றார். பாரதி மதத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் மொழியைக் கொண்டே இனங்களைப் பிரிக்கிறார். செந்தமிழ் நாட்டார், சேரத்து மக்கள், சிந்தை துணிந்த தெலுங்கர், கன்னடர், போரில் காலனும் அஞ்சும் மராட்டர், பஞ்ச நதத்துப் பிறந்தோர், வங்கநாட்டு வீரர் ஆகிய பல்வேறு இனத்தவரும் தனித்தனியாக அணிவகுத்து தாயின் மணிக் கொடியின் கீழ் நின்று, “எங்கள் நல்லுயிர் ஈந்தும் இக் கொடியினைக் காப்போம்” என்று சபதம் செய்யும் “அந்த அற்புதக் காட்சியோர் ஆனந்த மன்றோ!” என்று கூறி பாரதி அகங் களிக்கிறார். ஆம்; இனவாரி சுதந்திரம்தான் இந்தியாவின் ஐக்கியத்தைக் காக்கும் என்ற உண்மையை இந்தப் பாடல் உணர்த்துகிறது.

இன்று பாரத நாடு முழுவதும் நிலவிவரும் மொழிவழி இன உணர்ச்சியை கற்பனைக் கண்ணால் கண்டு பாடினாரே, அந்தப் பாரதியை நினைப்போமாக! அப்போது நம் இருதயத்தில் ஓர் இறுமாப்பு கிளர்ந்தெழும்; தமிழன் என்ற உண்மை உணர்ச்சி உள்ளத்தே பொங்கும்; தமிழ் மொழியில் உயிர்ப் பற்று உண்டாகும்; தன்னம்பிக்கை பிறக்கும்.

தமிழராகிய நம்மை இன்று வெள்ளையன் மட்டுமல்லாமல், வேற்று இனத்தவனும் சுரண்டு



கிறான். ஆங்கில மொழி மட்டுமல்லாமல், நம் நாட்டிலேயே உள்ள அயல் மொழிகளும் தமிழ் மொழியை அடக்கி ஆளுகின்றன. நம்மிடம் தன்னம்பிக்கை இல்லை. மார் தட்டித் தமிழன் எனப் பேசுகிறோம்; “நாமமது தமிழரெனக் கொண்டு வாழ்கின்றீர்! போதுமா?” என நகைக்கிறார் பாரதி. அகண்ட இந்துஸ்தானமா? ஆகட்டும். அகில இந்தியாவுக்கும் ஒரே சர்க்காரா? உடன்பாடு. ஆனால், பாரதியார் பாடிய மொழிவழி இனங்கள் அழியக்கூடாது. அந்த இனவாரியே அரசுகளும் அமையவேண்டும். அந்த இன அரசுகள் அடங்கிய ஐக்கிய இந்தியாவே தமிழன் குறிக்கோள்.

“முப்பது கோடி முகமுடையாள் உயிர் மொய்ம்புற ஒன்றுடையாள்; அவள் செப்பும் மொழி பதினெட்டுடையாள் எனிற் சிந்தனை ஒன்றுடையாள்” என்கிறார். மக்கள் முகமனைத்தும் மாதாவின் முகங்கள் என அவர் கற்பனை செய்கிறார். மக்களில் ஒருவருக்குக் கேடு செய்யப்பட்டாலும் அது பாரத அன்னைக்குக் கேடு செய்தது போலாகும் என்பது பாரதியாரின் கருத்து.

மொழிவழி இனம் பிரித்த பாரதி, அந்த இனங்களையெல்லாம் அவர் எந்தச் சாதி சமயமாயினும் ஒன்றாக அணைத்து அன்பு பாராட்டுகிறார். அவர் அனைத்திந்தியாவையும், அனைத்துலகையும் தமிழ்க் கையால் தழுவுகிறார். ஏன்? ஓர் நாள், தமிழ்ப்பண்பு இந்தியா முழுவதிலும் தழைத்திருந்தது. இதை மொகன்ஜதாரோ ஆராய்ச்சி அறிவிக்கவில்லையா?

சிந்து நதியிலே ஓடம் விடுகிறார் பாரதி. நல்ல நிலவொளி தவழ்கிறது. தென்றல் வீசுகின்றது.

கூறி அறங் கொன்று சதிகள் செய்த, "சுமடர் சட சடவென்று சரிந்திட்டார்" என்று சினம் பொங்கப் பாடுகின்றார். ஆம், கொடுங்கோலன் ஜாரின் அரசு அழிந்தது மட்டுமல்ல; அவனது கொடுங்கோலுக்கும், முதலாளி வர்க்கத்தின் கொள்ளை முறைக்கும் தூபம் போட்டுத் துதிபாடிய பொய்யர்களும்பொசுங்கினராம்.

அப்பொய்யருக்கு "அறங் கொன்ற சுமடர்" என்று பாரதி தந்த பட்டம் பொருத்தமுடையது தானே! தமிழகத்துச் சந்தர்ப்ப வாதிகளைச் சிந்தையில் கொண்டே பாரதியார் பாடினார் போலும்!

பாரதி, ஜார் மன்னனின் கொடுங்கோலைத் திறம்பட உணர்த்தத் தேடுகிறார் உவமானம். ஜாருக்கு முன்னம் கொடுங்கோலர் பலர் அரசியல் அரங்கிலே தோன்றியதுண்டு. வரலாற்றில் காணப் படும் கொடுங்கோலர் வரிசையிலே ஜாருக்கு இணையான பாதகன் எவனுமில்லை. எனவே, இதிகாசத்தில் வரும் இரணியனை எடுகாட்டுகிறார்;

இரணியன்போல் அரசாண்டான் கொடுங்கோலன்
ஜாரெனும் பேர் இசைந்த பாவி
சரணின்றித் தவித்திட்டார் நல்லோரும்
சான்றோரும்; தருமந்தன்னைத்
திரணமெனக் கருதிவிட்டான் ஜார்மூடன்

என்கிறார். மாபாவி ஜார் மன்னன் இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்துவிட்டானும். அவன் மட்டுமா வீழ்ந்தான்? அவனைச் சூழ்ந்து,

சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி
அறங்கொன்று சதிகள் செய்த
சுமடர் சட்சட்வென்று சரிந்திட்டார்



அவர்கள் சரிந்து வீழ்ந்த காட்சி, "புயற் காற்று சூறைதன்னில் திமுதிமென மரம் விழுந்து காடெல்லாம் விறகான" காட்சியாக இருந்ததாம். ருஷ்யப் புரட்சியைக் கண்ணாரக் கண்ட புலவன்கூட இவ்வளவு உணர்ச்சி கலந்த ஓவியத்தைத் தீட்டிக் காட்ட முடியாது.

ஜாரின் அழிவோடு, அவனைச் சூழ்ந்திருந்த சதிகாரக் கூட்டத்தின் நாசத்தோடு, ருஷ்யாவில் தனிவுடைமை சகாப்தம் முடிந்து, உழைப்பாளி மக்களுக்கு உரிமைதரும் பொதுவுடைமை சகாப்தம் தோன்றியதாம்.

கொடுங்கோலரசை அழித்து முடித்ததும் அடுத்தபடியாக அரியாசனம் ஏறியவர்கள், மக்களுக்கு நீதி வழங்க அவகாசம் கேட்டார்களா? இல்லை; ஜார் ஆட்சி வீழ்ச்சியுற்ற மறுகணத்திலேயே ருஷ்ய அரசினர்,

குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றி லெழுந்தது பார்; குடியரசென்று
உலகறியக் கூறிவிட்டார்
அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போ
தடிமையில்லை அறிக

என்றார்களாம். இந்தப் புரட்சிக்குப் பின் ஜார் ருஷ்யா, சோவியத் ருஷ்யாவாக மாறியது. முடியாட்சி மறைந்து குடியாட்சி-மொழிவாரி இனங்களுக்குச் சுயாட்சி-கிடைத்தது. இந்த மாறுதல்கள் சாமான்யமாகத்தோன்றவில்லை பாரதிக்கு. 'யுகப் புரட்சி' என்கிறார், முக்காலமும் உணரும் சக்தி வாய்ந்த முத்தமிழ்ப் புலவர் பாரதி. இதை, " இடி-

கம் இல்லை. அதை நினைவூட்டத்தான் விடுதலை விழாவை ஒட்டி பாரதி விழா வருகிறது போலும்!

பறையருக்கும் இங்குதீயர் புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை

எனப்பாடி பாரதியும் விடுதலை விழா கொண்டாடுகிறார். ஆம், சமூகத்தின் அடிதளத்திலேசிக்கி அல்லல்படும் பழங் குடிமக்களோடு கைகோர்த்துக் கூத்தாடி விடுதலை விழா கொண்டாடுகிறார் பாரதியார். அவரது விடுதலைப் பாட்டிலே வருங்கால வாழ்வுக்கான விளக்கமும் இருக்கிறது.

திறமை கொண்ட தீமையற்ற தொழில்புரிந்து
யாவரும்
தேர்ந்தகல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த
நாட்டிலே

விடுதலை பெற்ற இந்தியாவில் தொழில் சக்தி பெருக வேண்டும். இல்லையேல், விடுதலை பெற்ற பின்னரும் வறுமை தொலையாது; வாழ்வு சிறக்காது. "ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்" என்றும், பட்டினிலாடையும் பஞ்சிலுடையும், பண்ணி மலைகளென வீதி குவிப்போம்" என்றுப் தாம் காணும் "திறமை மிக்க தொழில்"களின் பட்டியல் தருகின்றார் பாரதி.

திறமை மிக்க தொழில் மட்டும் போதாது; தீமையற்ற தொழிலாகவும் இருக்க வேண்டும் என்றும் சேர்த்துச் சொல்லியிருக்கிறார் பாரதி. இதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

# பெண் குலத்தின் விடுதலை

நமது தாயகம் விடுதலை பெற்றது உண்மை. ஆனால், தாயினமாம் பெண்குலம் விடுதலை பெற்றதா? இல்லையே! அவர்கள் வாயிருந்தும் ஊமைகள். பெண்ணினம் வாய் பெற்றது அடுப்பூதுவதற்கேயன்றி, அரசியல் பேச அல்ல. இதுதான் ஆணினத்தின் தீர்ப்பு! அந்தத் தீர்ப்பைத் தீயிலிட்டுப் பொசுக்கி, பெண்ணினம் செய்யும் உரிமைப் பிரகடனத்தைக் கேளுங்கள்:

பட்டங்கள் வளான்பதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி

சமூகத்தில் புகுந்த சதிகளை நிலைநிறுத்த, சாமியைத் துணைக்கிழுப்பர் சாத்திரவாதிகள். ஆணினத்திற்குப் பெண்ணினம் அடிமைப் பட்டு அறிவிழந்து நிற்பது ஆண்டவனின் தீர்ப்பென்றும் கூறுவர். பாரதியாரோ, பெண்ணினம் பெருமையிழந்ததற்குக் காரணம், சாமியல்ல, சரித்திரம் பேசும் சழக்கர்களே என்கிறார்.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர்—நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்

என்பது பாரதியாரின் முடிவு.

புகுந்த வட இந்திய மக்களுக்கு பெருஞ் சோறு வழங்கிப் பெருமை பெற்ற நாடு. இதை,

இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெருநாடு
கனியுங் கிழங்குந் தானியங்களும்
கணக்கின்றித் தரும் நாடு—இது
கணக்கின்றித் தரும்நாடு நித்தம் நித்தம்
கணக்கின்றித் தரு நாடு

என்று நாட்டின் நில வளத்தை நினைவூட்டுகின்றார். 'எல்லாம் சரி; எதிர்கால வாழ்வுக்கு எடுத்து வைக்க வேண்டாமா?' என்று இயம்புவோருக்கு,

வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்—இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்—பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்

என்ற வரிகளில், இயற்கை அன்னைக்கு உழைப்பு என்னும் காணிக்கை செலுத்தி உயிர் வாழும்படி உபதேசிக்கிறார்.

பாரதி காட்டிய ஆக்க வழியிற் சென்று சுதந்திர இந்தியா சுகம் பெறுமாக!

# புரட்சிக் கவிஞர்

தமிழகத்தில் வாழையடி வாழையாகத் தோன்றி வந்த புலவர்களின் திருக்கூட்டத்திலே பாரதியும் ஒருவர். என்றாலும், தமிழுக்குப் புத்தொளியும் புதுமணமும் தந்த புலவர் பெருமக்களிலே பாரதியாருக்குத் தனி இடம் உண்டு.

தமிழைக் கொண்டு பொருள் சேர்க்கலாம்: புகழும் சேர்க்கலாம். ஆனால், பாரதி அப்படிச் செய்யவில்லை. அவர் தமிழைப் போர்க் கருவியாகக் கொண்டு பழமையைச் சாடி, புதுமைக்கு வித்திடும் புரட்சிக் கவியாகத் திகழ்ந்தார்.

உரிமைக்குப் போரிடும் மக்கள் எங்கெல்லாம் உண்டோ அவர்களிடமெல்லாம் தமது உள்ளத்தால் உறவு கொண்டார் பாரதி. அவர் இயற்றிய "மாஜினியின் பிரதிக்கினை" இத்தாலி தேசபக்தர்களின் எண்ணத்தை எடுத்துக் காட்டும் எழுத்தோவியம்.

போரில் வெற்றி பெற்ற நாட்டுக்கே வாழ்த்துக் கூறிப் பாடுவர் புலவரெல்லாம். ஆனால், ஜெர்மனியோடு போரிட்டு வீழ்ச்சி பெற்ற பெல்ஜியத்துக்கு வாழ்த்துக் கூறினார் பாரதி. ஏன்? அதன் வீழ்ச்சியிலே நீதியின் வெற்றி அடங்கி யிருந்த காரணத்தினால். அறத்தினால் வீழ்ந்துவிட்ட பெல்ஜியத்தின் வீரத்தை, முறத்தினால் புலியை ஓட்டும் சேர நாட்டுக் குறப் பெண்களின் வீரத்தோடு ஒப்பிட்டு வாழ்த்துக் கூறினார்.



ஜெர்மன் படையை ஊடுருவிப் பாய்ந்து பெல்ஜியப் படை வீரர் போரிட்ட மாட்சியை,

மறுளுறு பகைவர் வேந்தன்
வலிமையாற் புகுந்த வேளை
"உருளுக தலைகள், மானமோங்குக" என்
றெதிர்த்து நின்றாய்

என்ற வரிகளில் திறம்பட வருணிக்கிறார்.

பாரதியின் சுதந்திர உணர்ச்சி சோவியத் புரட்சியைப் பாடத் தூண்டியது. ஜார் ருஷ்யாவில் மக்கள் சக்தி பொங்கி எழுந்து புரட்சி விளைத்ததை,

மாகாளி பராசக்தி உருசிய நாட்டினிற்
கடைக்கண் வைத்தா ளங்கே
ஆகாவென் றெழுந்தது பார் யுகப்புரட்சி!

என்று இதயத் துடிப்புடன் பாடுகிறார். பாரதியாரின் கருத்திலிருந்த பராசக்தி மக்கள் சக்தியேயன்றி மற்றொன்றல்ல. ருஷ்யப் புரட்சியின் விளைவாக,

கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்

என்கிறார். கோடானுகோடி கைகள்-ஓயாது உழைத்தும் உணவைக் காணாத கைகள்—கொடுங்கோலன் ஜாரின் கழுத்தைக் குறிபார்த்தபோது, 'அபயம்' 'அபயம்' என்று அலறினானாம்! கொடுங்கோலுக்கு மக்கள் சக்தி மன்னிப்புத் தருவது முடியாத காரியம் அல்லவா? ஆண்டாண்டுதோறும் அழுது நொந்த மக்கள், அழுகையை ஆவேசமாக மாற்றி அணிவகுத்துப் படை திரண்டால், கொடுங்கோலனுக்குக் கிடைக்கும் இடம் அரியாசனமா? அல்ல; படுகுழி!

ஜாரின் வீழ்ச்சியைக் கூறிய பாரதி, அவனைச் சூழ்ந்து சமயமுள்ள படிக்கெல்லாம் பொய்

பட்ட சுவர்போல கலி விழுந்தான் 'கிருத யுகம்' எழுக'' என்ற வரிகளிலே வற்புறுத்துகிறார்.

சோவியத் புரட்சிக்குப் பிறகு, உலக மெங்கும் பொருளாதாரப் புரட்சி தோன்றி வெற்றி பெறும் என்பதைப் பாரதி தெள்ளத் தெளிவாக உணர்ந்திருந்தார். அதனாற்றான்,

முப்பது கோடி ஜனங்களின் சங்க
முழுமைக்கும் பொதுவுடைமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்திற்கொரு புதுமை

இனியொரு விதி செய்வோம்--அதை
எந்தநாளும் காப்போம்
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்

என்ற எண்ணங்களைத் தெரிவித்து எதிர்கால இந்தியாவுக்கு வாழ்த்துக் கூறிச் சென்றார்.

ருஷ்யா கண்ட அந்த ''முழு விடுதலை'' இன்னும் இந்தியாவுக்குக் கிடைக்கவில்லை. வெள்ளை முதலாளித்துவம் காலி செய்த ஆதிக்க பீடத்தில், இந்திய முதலாளித்துவம் ஏறிக்கொலுவீற்றிருக்கிறது. இங்கும் சமயமுள பசடிக்கெல்லாம் பொய்கூறி அறங்கொல்லும் சுமடர்கள் அதற்குத் துதிபாடுகின்றனர்.

எனவே, அரசியல் விடுதலைபெற்ற இந்தியா இன்னொரு பொருளாதார விடுதலைப் புரட்சிக்குத் தயாராகி வருகிறது. அந்தப் புரட்சி, அண்ணல் காந்தி கற்றுத் தந்த அறவழிப்பட்டதாக இருக்குமென்பதில் ஐயமில்லை. தமிழகம் கலை வளர்க்கும் நாடு. அதற்கு மாறான கொலை வளர்க்கும் 'புரட்சி' இங்கு



வெற்றிபெற முடியாது. அடிமை இந்தியாவில் வாழ்ந்த பாரதி, விடுதலை இந்தியாவை கற்பனையால் கண்டு 'ஆனந்தப் பள்ளு' பாடினார். அப்பாட்டில்,

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம்—வெறும்
வீணருக் குழைத்துடலம் ஓயமாட்டோம்

இது, விடுதலை இந்தியாவின் பாட்டாளி மக்களுக்குப் பாரதி விடுக்கும் செய்தி.

உழைப்பாளி மக்களைச் சுரண்டிப் பிழைக்கும் உடைமையாளர்களை, சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காது பண்டங்களைப் பதுக்கிவைக்கும் பாதகர்களைப் பார்த்து,

மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ?

என்று கேட்கிறார். ஒளித்து வைக்கும் வழக்கம் ஒருவரிடத்தும் இல்லை; உற்பத்திக் குறைவுதான் பஞ்சத்திற்குக் காரணம் என்று கூறி ஏய்க்கின்றவர் சிலர். பாரதம், ஜீவ நதிகளைப் படைத்த நாடு. நிலப் பரப்புக்கும் குறைவில்லை; தமிழகமும் காவிரி ஆற்றைப் படைத்த கழனி நாடு, 'சோழ வளநாடு சோறுடைத்து' என்று புலவர் பெருமக்களால் புகழ்ப்பெற்ற நாடு. வடக்கே பாண்டவருக்கும் கௌரவருக்கும் போர் நிகழ்ந்தபோது, யுத்த பயத்தால் அகதிகளாக வந்து தமிழகத்தில் அடைக்கலம்